பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 11 2026 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில், மெட்ரோ ரயில் கட்டமைப்பு பெருமளவு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஜனநாயக நாட்டில் மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க நாடாளுமன்றம்தான் உயரிய இடம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, பிஜேபி சார்பில் மத்தியப்பிரதேச மாநிலத்திலிருந்து, மாநிலங்களவை உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

4. மத்திய அரசின் வரி வருவாய் பகிர்வாக மாநிலங்களுக்கு ஒரு லட்சத்து **9** ஆயிரத்து **19** கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

5. போர்ச்சுக்கல் கால்பந்து வீரர் **Cristiano Ronaldo** சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மெட்ரோ ரயில் கட்டமைப்பு பெருமளவு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **2014**-ஆம் ஆண்டுக்கு முன்பு ஐந்து நகரங்களில் **248** கிலோமீட்டர் தொலைவுக்கு மட்டும் மெட்ரோ ரயில் இயக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கடந்த **12** ஆண்டுகளில் **26** நகரங்களில் ஆயிரத்து **200** கிலோமீட்டர் தொலைவுக்கு இந்த சேவை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம், தினந்தோறும் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஜனநாயக நாட்டில் மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க நாடாளுமன்றம்தான் உயரிய இடம் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் கர்னாலில், பிஜேபி சார்பில் நடைபெறும் பாத யாத்திரையை தொடங்கிவைத்து பேசிய அவர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, நாடாளுமன்ற செயல்பாட்டிற்கு இடையூறு ஏற்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

ராகுல்காந்தியின் செயல்பாடுகளை பிஜேபி, நாடாளுமன்றம், மாநில சட்டப்பேரவைகள் மட்டுமின்றி, பொதுமக்களிடமும் எடுத்துரைத்து வருவதாக திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக, காங்கிரஸ் கட்சி, மக்களை தவறாக வழிநடத்துவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் நடைபெற்ற பிஜேபி பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்காகவே சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திர செயல்பாடு குறித்த காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்தார்.

மின்னணு இயந்திர வாக்குப்பதிவு நடைமுறைக்கு வந்ததில் இருந்து பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் மாறி மாறி ஆட்சிப் பொறுப்புக்கு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கேரளத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை கைப்பற்றியபோது, இத்தகைய குற்றச்சாட்டை முன்வைக்காதது ஏன் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கேள்வி எழுப்பினார்.

<<<<<>>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில், கடந்த பத்தாண்டுகளில் **15** லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மாநாடு ஒன்றில் பேசிய அவர், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் சுமார் **6** லட்சம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, பிஜேபி சார்பில் மத்தியப்பிரதேச மாநிலத்திலிருந்து, மாநிலங்களவை உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

வேட்புமனுவை திரும்பப் பெறுவதற்கு கடைசி நாளான இன்று அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

<<<<<>>>>>

மத்திய அரசின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் வழங்குவதற்கான முகாமை மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் புதுதில்லியில் நாளை தொடங்கிவைக்கிறார்.

நாடு தழுவிய இந்த முகாம் இம்மாதம் **30**-ஆம் தேதிவரை நடைபெற உள்ளது.

பொதுத்துறை வங்கிகள், இந்தியா போஸ்ட் வங்கி, தனித்துவ அடையாள அட்டை ஆணையம், ஓய்வூதியதாரர் நலச்சங்கங்கள் மற்றும் மத்திய அரசு அலுவலகங்களில் இந்த முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயது முதிர்வு அல்லது உடல்நலன் காரணமாக முகாமுக்கு வர இயலாத ஓய்வூதியதாரர்களின் வீடுகளுக்கே சென்று இந்த சேவை வழங்கப்படும் என்றும் மத்திய ஓய்வூதியதாரர் நலத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மத்திய அரசின் வரி வருவாய் பகிர்வாக மாநிலங்களுக்கு ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 19 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக, நவம்பர் 10-ஆம் தேதி இந்த தொகை விடுவிக்கப்படும் நிலையில், பண்டிகை காலத்தையொட்டி, மாநில அரசுகளின் மூலதன செலவுகள், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கான செலவுகளை மேற்கொள்ள ஏதுவாக, முன்கூட்டியே விடுவிக்கப்படுவதாக நிதியமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உத்தரப்பிரதேசத்திற்கு 19 ஆயிரத்து 208 கோடி ரூபாயும், பீகாருக்கு 10 ஆயிரத்து 845 கோடி ரூபாயும், தமிழகத்திற்கு 4 ஆயிரத்து 466 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி, காட்மாண்டுவில் இன்று நேபாள பிரதமர் திரு பாலேந்திர ஷாவை சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இருதரப்பு நலன்சார்ந்த பல்வேறு ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், நேபாள பிரதமரின் இந்திய வருகை குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நேபாள வெளியுறவுத்துறை செயலாளர் திரு அம்ரித் பகதூர் ராயுடனும், திரு விக்ரம் மிஸ்ரி பேச்சு வார்த்தை நடத்தினார்.

<<<<<>>>>>

ஒடிசா, அருணாச்சலப்பிரதேசம், மிசோரம் மாநிலங்கள் மற்றும் சண்டிகர், தாத்ரா — நாகர்ஹாவேலி, டாமன்-டையூ யூனியன் பிரதேசங்களில், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது

வரும் ஜனவரி ஒன்றாம் தேதியை அடிப்படையாக கொண்டு இந்த திருத்தப்பணிகள் தொடங்கும் என்றும் தேர்தல் ஆணைய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில வாக்குச்சாவடிகளை மாற்றியமைக்கும் பணிகள் இம்மாதம் **20**-ஆம்

தேதிக்குள் முடிக்கப்பட்டு, 30-ஆம் தேதிக்குள் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அந்த ஆணையம் கூறியுள்ளது. வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய இம்மாதம் 30-ஆம் தேதியிலிருந்து, அடுத்த மாதம் 30-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் எனவும், அடுத்த ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டிடங்களை விற்பனை செய்ய அமைச்சகங்களுக்கு இடையிலான குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள் துறை செயலாளர் தலைமையில் தொலைத்தொடர்புத்துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்ற இக்குழுவின் கூட்டத்தில், சுமார் ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கிடைக்கும் நிதியை பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகள் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு விரைவில் அனுப்பப்பட உள்ளதாகவும் நிதியமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

கேரளம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நடவடிக்கையில் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருப்பதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஐ. ஜி. திரு விமலாதித்யா, போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை தொடர்பாக, 14 ஆயிரத்து 369 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்த சிறப்பு நடவடிக்கையின்போது 2 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கடலோர ஆந்திரப்பிரதேசம், தெற்கு உட்புற கர்நாடகா, கேரளம் மற்றும் தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிஷா, கடலோர கர்நாடகா, கேரளம், மாஹே, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடுத்த மூன்று நாட்களுக்கு சூறாவளி காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், தலைநகர் தில்லியில் காற்று மாசு மிக மோசமான நிலையை அடையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

போர்ச்சுக்கல் கால்பந்து வீரர் **Cristiano Ronaldo** சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், போர்ச்சுக்கல் அணியின் சார்பில் **23** ஆண்டுகளாக விளையாடி இருப்பது தமக்கு பெருமிதம் அளிப்பதாக கூறியுள்ளார்.

ஆறு உலகக்கோப்பை போட்டிகள் மற்றும் ஐரோப்பிய கால்பந்து போட்டி உட்பட பல்வேறு போட்டிகளில் விளையாடியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள **Ronaldo,** அடுத்த தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்க வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 7-6,** என்ற செட் கணக்கில், பாகிஸ்தானின் **Muzammil Murtaza**-வை வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் திக் விஜய் பிரதாப் சிங்கும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா — பாகிஸ்தானை வென்றது.

டாக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் முதல் ஆட்டத்தில், இந்தியா **3-2** என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தைவான் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — நியூசிலாந்தின் **Ajeet Rai** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **4-6, 7-6, 10-8** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Nathaniel Lammons — Jackson Withrow** இணையை வென்றது.

<<<<<END>>>>>